அமைந்துள்ள வேலூர் CMC மருத்துவமனை விரிவாக்கம் பகுதி 2-க்கு ஆரணி மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு தினந்தோறும் செல்கிறார்கள். எனவே, ஆரணி முதல் பூட்டுத்தாக்கு வரை ஒரு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மேலும், இவ்வழித்தடம் அமைந்தால் இடைப்பட்ட பகுதிகளில் உள்ள இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலுக்கு பக்தர்கள் செல்லவும் வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள், திருவண்ணாமலை மற்றும் ஆரணி பகுதியிலிருந்து CMC மருத்துவமனைக்கு பேருந்துகள் இயக்க வேண்டும் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். தற்போதுதான், புதிய பேருந்துகள் வாங்கப்படவிருக்கின்றன. பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்படும்பொழுதும், அடுத்தகட்டமாக ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அந்தப் பேருந்துகளை இயக்கி வைப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

குடமுழுக்கு

***21589—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2024 பிப்ரவரி 22]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கொங்கரப்பட்டு கிராமம், அருள்மிகு வேங்கட வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் கோரிய வேங்கட வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு, 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. பிரிவு 49 (1)-ன்கீழ் வருகிற இத்திருக்கோயில், ஆண்டிற்கு பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானம் ஈட்டுகின்றது என்பதால், இந்த கிராமப்புற மக்கள் ஒன்று சேர்ந்து இக்கோயிலின் திருப்பணியைத் துவக்கியிருக்கிறார்கள். நிதி திரட்ட முடியவில்லை என்ற காரணத்தால், அந்தப் பணி பாதியிலே நிற்பதை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அறிந்து, தொல்லியல் துறை, மாவட்டக் குழு மற்றும் மாநில தொல்லியல் குழு ஆகியவற்றின் அனுமதி பெற்று, போதிய நிதி ஆதாரத்தை ஏற்படுத்தித் தந்து, இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமை வாய்ந்த திருக்கோயிலான வேங்கட வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு மாநில வல்லுநர் குழுவிடம் ஒப்புதல் பெறுவதற்கான பணி நடவடிக்கையில் உள்ளதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மதிப்பீடு தயார் செய்து, இந்த ஆண்டு திருப்பணியைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-05

இதேபோன்று வல்லம் ஒன்றியத்தில் குறிஞ்சிப்பை கிராமத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ பட்டாபிராமன்

திருக்கோயில், மேல்சேவூர் கிராமத்திலுள்ள சிவன் கோயில், தளவானூர் கிராமத்திலுள்ள சிவன் கோயில், வீரணாமூர் கிராமத்திலுள்ள கலிவரதப் பெருமாள் கோயில், களையூர் கிராமத்திலுள்ள பெருமாள் கோயில், மொடையூர் கிராமத்திலுள்ள பெருமாள் கோயில் ஆகிய கோயில்கள் பல வருடங்களாகப் பழுதடைந்துள்ளதால் இந்த திருக்கோயில்களும் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய சிவன் கோயில் ஒன்றும், பெருமாள் கோயில் ஒன்றும், அதேபோல், மொடையூரைச் சார்ந்த மற்றொரு பெருமாள் கோயிலும் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும், துறை சார்பிலே உபயதாரர்களை அணுகி, நிதி ஏற்பாடு செய்து, அந்தத் திருக்கோயில்களுக்குத் திருப்பணி நடத்தப்பட்டு, குடமுழுக்கு நடத்துவதற்குண்டான பணிகள் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும். அதேபோல் அவர் கோரிய மற்ற ஐந்து திருக்கோயில்கள் உள்ளிட்ட மொத்தம் எட்டு திருக்கோயில்களுக்கான கோரிக்கையை மடமடவென வேகமாக தெரிவித்தார். அதில் மூன்று திருக்கோயில்கள் துறையின் சார்பில் இல்லை. மீதமிருக்கின்ற ஐந்து திருக்கோயில்களில் மூன்று திருக்கோயில்களில் திருப்பணிகள் துவங்க ஆரம்பகட்டப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கைலாசநாதர் திருக்கோயிலுக்கு ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், மேல்சேவூர் ரிஷபபுரீஸ்வரர் ஆலயத்தில் 89 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக இன்று ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் கோரிய வரதராஜப் பெருமாள் கோயில் மற்றும் எம தண்டீஸ்வரர் கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கும் விரைவில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2024 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களில் சபரிமலை ஐயப்பன் திருக்கோயில் யாத்திரைக்குச் சென்றவர்கள் கடும் கூட்ட நெரிசலிலும், கழிப்பறை, குடிநீர், உணவு போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமலும் கடினமான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இனிவருங்காலங்களில், சபரிமலை யாத்திரை செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகைகளில் வரப்பெற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர், கேரள மாநிலத் தலைமைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, சபரிமலைக்குச் செல்கின்ற பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரவும், இன்னலுக்குள்ளாகும் பக்தர்களுக்கு உடனடியாக உதவிகள் செய்வதற்காகவும் சபரிமலையிலேயே கன்னியாகுமரி தேவஸ்தானத்திற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கண்காணிப்பாளர் ஒருவரையும், மணியக்காரர் ஒருவரையும் பணியமர்த்தியுள்ளார்கள். மேலும், பக்தர்களுக்குத் தேவைப்படுகின்ற உதவிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல், உணவு, தண்ணீர் இல்லை என்ற பத்திரிகைச் செய்தியையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் பத்து இலட்சம் எண்ணிக்கையிலான பிஸ்கட் பாக்கெட்டுகள் சபரிமலைக்கு அனுப்பப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

[2024 பிப்ரவரி 22

அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்ற தமிழ்நாட்டு பக்தர்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்படக் கூடாது என்பதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டில் மேலும் கூடுதலாக என்னென்ன சிறப்பு உதவிகளை மேற்கொள்ளலாம் என்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், அடுத்த ஆண்டு தமிழக பக்தர்களுக்கு எந்த இன்னலும் ஏற்படாத அளவுக்கு இதைவிடக் கூடுதலாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 11 திருக்கோயில்களில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. 10 திருக்கோயில்களில் 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த 10 திருக்கோயில்களுக்கும் திருப்பணி நடந்து முடிந்து குடமுழுக்கும் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதுரவாயல் அருள்மிகு மார்க்க சகாய ஈஸ்வரர் திருக்கோயில் 800 ஆண்டுகள் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் அருணகிரி நாதருக்கு வழிகாட்டிய திருக்கோயில் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இத்திருக்கோயிலுக்கு கடந்த 24-6-2022 அன்று மிகச்சிறப்பான முறையில் குடமுழுக்கு நடைபெற்றது. திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் பயன்பெறும் வகையில், அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2024 பிப்ரவரி 22]

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்னதானம் கொடுப்பதாக இருந்தால், என்னுடைய தொகுதியிலும் வள்ளியூரில் முருகன் கோயில், பணகுடியில் இராமலிங்கசாமி திருக்கோயில், பழவூரில் நாறும்பூநாதர் ஆலயம் மற்றும் ராதாபுரத்தில் நித்திய கல்யாணி அம்மன் கோயில், இதிலேயும் கருணை காட்டுங்கள், சேர்த்துச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு பதில் சொல்ல வேண்டுமென்று எண்ணுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கோரிய அந்த 2 திருக்கோயில்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மொத்தம் 4. அதில் 2 திருக்கோயில்கள் ஒவ்வொன்றிலும் ரூ.70 இலட்சம் செலவில் அன்னதான மண்டபம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த 2 திருக்கோயில்களிலும் ஒரு வேளைக்கு 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. நிதியாதாரம் இல்லாவிட்டாலும், நீங்கள் கோரிய மேலும் இரண்டு திருக்கோயில்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று இந்த ஆண்டு அன்னதானத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

நம்முடைய உறுப்பினர் கோரிய மார்க்க சகாய ஈஸ்வரர் ஆலயத்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணி தொடங்கப்பட்டது. 13 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த திருப்பணி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் நடைபெற்று, கடந்த ஆண்டு குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கின்றது.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் அன்னதானம் வழங்குவதில் பெரிய புரட்சியை ஏற்படுத்திய அரசு, திராவிட மாடல் அரசு என்பதற்கு ஒரேயொரு மேற்கோளைக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 9 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத்

திட்டத்தையும், 763 திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானத் திட்டத்தையும் கொண்டுவந்து, தமிழகத் திருக்கோயில்களில் நாள் ஒன்றுக்கு 92,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு உணவருந்தி வருகிறார்கள். இந்த அன்னதானத் திட்டத்திற்கு ஆண்டிற்கு 111 கோடி ரூபாய் செலவு செய்து வருகின்றோம்.

இந்திய ஒன்றியத்திலேயே தமிழகத்தில்தான் உணவு தரமோடு வழங்கப்படுகிறது என்ற சான்றிதழ் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது. அப்படி வழங்கப்பட்டிருக்கின்ற சான்றுகளில் BHOG எனப்படுகின்ற சான்றிதழை, இந்தியாவிலேயே அதிகமாக 523 சான்றிதழ்களைப் பெற்ற மாநிலமாக தமிழகம் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழும் வள்ளலார் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில் 'எங்கும் மகிழ்ச்சி, எதிலும் மகிழ்ச்சி' என்பதுபோல், இறைப்பசியோடு வரும் இறையன்பர்களுக்கு, வயிற்றுப் பசி இல்லாமல் அனுப்புகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுனன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை திருக்கோயிலில் சாமி தரிசனம் செய்ய தமிழகம் மட்டுமல்லாமல் வெளி மாநில பக்தர்கள் அதிகமாக வருவதால், அங்கு 4 வழிச் சாலை அமைக்கப்படுமா, அப்படி அமைத்தால் எப்போது அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மருதமலை முருகர் திருக்கோயிலைப் பொறுத்தளவில், கடந்த ஆண்டு நிலுவையில் இருந்த மின்தூக்கிப் பணி, இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களால் துவக்கப்பட்டு

பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. Master plan வரைவுத் திட்டத்தின்படி கோயில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன. வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சாலை அமைப்பதில் இருக்கின்ற பல்வேறு சிக்கல்களை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆகிய இருவரும் சேர்ந்து 3 மாதங்களுக்கு முன்பு கள ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதன்தொடர்ச்சியாக, நானும் வனத் துறை அதிகாரிகளோடு பேசியிருக்கின்றேன். ஏற்கெனவே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், பழுதடைந்த மலைப்பாதை சுமார் 3 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. வெகுவிரைவில் அது செயல்பாட்டிற்கு வருவதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியில் உள்ள அய்யர்மலை இரத்தினகிரீசுவரர் திருக்கோயில் சுமார் 1,200 அடி உயரத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும். அந்தத் திருக்கோயிலுக்கு rope car வசதி வேண்டுமென்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையாகும். நம்முடைய மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, 2010 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் பிறகு வந்த ஆட்சியாளர்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டு, அதன்பிறகு திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி அவர்களின் அமைச்சரவையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அய்யர்மலையில் உச்சி மலைக்கு வந்து ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, விரைவில் அந்தப் பணியை முடிக்கச் சொல்லியிருந்தார்கள். அந்தப் பணிகள் எப்போது முடியும், அந்த rope car எப்போது இயக்கத்திற்கு வரும் என்று மக்கள் மிகுந்த ஆவலோடு இருக்கின்றார்கள்

[2024 பிப்ரவரி 22

என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, rope car எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்பதைக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டாக அல்ல; அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி காலையிலே அந்த rope car-ஐ மக்கள் பயன்பாட்டிற்கு அன்றைய அரசு அர்ப்பணித்ததாகக் கல்வெட்டு இருக்கின்றது. ஆனால், அந்தப் பணிகளில் 50 சதவிகிதப் பணிகள்கூட முடிவுறாத நிலையில், தவறான தகவலின் அடிப்படையில் அந்த rope car செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டதாக அறிவித்துவிட்டார்கள். அதன்பிறகு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையை ஏற்று 1,017 படிகள் கொண்ட அந்த மலைக்கு அதிகாரிகளோடு நானும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தேன். அங்கு கழிவறைகள் இல்லை, கழிப்பிட வசதி இல்லை, பக்தர்கள் தங்குகின்ற கூடம் இல்லை, தண்ணீர் வசதி இல்லை, வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்குண்டான வாகன நிறுத்துமிடம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று தற்போது 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகுவிரைவாக, அடுத்த மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு rope car வருவதற்குண்டான பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

அதேபோல், சோளிங்கர் மலையினுடைய rope car–ம் அதே நாளில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. எந்தப் பணிகளும் நிறைவேறாமல் இருந்த நிலையில், நம்முடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி அவர்களுடைய தனிப்பட்ட முயற்சியில் 12 கோடி ரூபாய் உபயதாரர் நிதி பெற்று, தற்போது அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்து, இந்த மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன்னுடைய பொற்கரங்களால் ஒப்படைக்க இருக்கின்றார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக

2024 பிப்ரவரி 22]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

கூடுதல் வகுப்பறைகள்

***51555—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, புக்கிரவாரி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு விடையளிக்க விரும்புகிறேன்.*

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, புக்கிரவாரி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியில் 211 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 7 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளிக்கு 3 வகுப்பறைக் கட்டடங்கள், 2 ஆசிரியர்கள் அறை, ஒரு நூலகம், ஓர் அறிவியல் ஆய்வகம், ஒரு மாற்றுத் திறனாளிக் கழிப்பிடம் உட்பட 6 கழிவறைகள் ஆகியன தேவைப்படுகின்றன. இதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு, வரும் கல்வியாண்டிலேயே NABARD *மூலம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்*